கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு கலைமாணித் தேர்வு 2011/2012

PHYS 4101 கட்டமைப்பு வாதமும் பின்நவீனத்துவமும்

**( Structuralism and Post Modernism )**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து மூன்று வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து ஒரு வினாவிற்கும் எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

01. அ) "கட்டமைப்புவாதம் என்பது இலக்கியம் பற்றிய ஒரு சர்வாதிகார அணுகுமுறையாகும்" இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க.

( 9 புள்ளிகள் )

ஆ) கட்டமைப்புவாதத்தின் பலவீனமான பண்புகளை இனங்கண்டு அவற்றை மதிப்பிடுக. ( 8 புள்ளிகள் )

இ) பார்த்தின் ( Barthes ) "படைப்பாளனின் இறப்பு" என்ற கருத்தினை கட்டமைப்புவாதம் மற்றும் பிற்கட்டமைப்புவாத பின்னணியில் ஆராய்க.

( 8 புள்ளிகள் )

02. அ) "லெவி ஸ்ரோஸ் ( Levi Strauss ) கட்டமைப்புவாத கூறுகளை ஒரு சமூகக் கட்டமைப்பில் அடையாளம் காண்பதில் வெற்றி பெற்றார்" இக் கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க, (9 புள்ளிகள்)

ஆ) "உலகளாவிய ரீதியில் புனைகதைகளில் சில அடிப்படையான கட்டமைப்புவாத கூறுகள் காணப்படுகின்றன" இக் கூற்றினை பொருத்தமான உதாரணங்களுடன் விளக்குக. (8 புள்ளிகள்)

இ) சமூகத்தை ஆய்வு செய்வதில் நேர்க்காட்சிவாதம், பரிணாமவாதம் மற்றும் செயல்பாட்டுவாதம் போன்ற அணுகுமுறைகளிலிருந்து எவ்வகையில் கட்டமைப்புவாதம் வேறுபடுகின்றது என்பதை எடுத்துக்காட்டுக, (8 புள்ளிகள்)

03. அ) கட்டமைப்புவாத நோக்கில் இலகானின் "அகம்" என்ற எண்ணக்கரு பெறும் முக்கியத்துவத்தினை விமர்சன ரீதியாக மதிப்பிடுக. ( 9 புள்ளிகள் )

ஆ) "இலகானின் மனம் பற்றிய பகுப்பாய்வு பிற்கட்டமைப்புவாத பண்புகளை வெளிப்படுத்துகின்றது" இக் கூற்றினை விளக்குக. ( 8 புள்ளிகள் )

இ) பேச்சுமையவாதம் ( Logocentrism ) பற்றிய டெரிடாவின் கருத்துக்களை விமர்சன ரீதியாக மதிப்பிடுக. ( 8 புள்ளிகள் )

04. அ) கட்டமைப்புவாதம் தொடர்பாக டெரிடா முன்வைக்கும் விமர்சனங்கள் யாவை? விளக்குக. ( 9 புள்ளிகள் )

ஆ) "பிற்கட்டமைப்புவாதம் பன்மைத்தன்மைக்கு முக்கியத்துவம் வழங்கும் ஒரு தத்துவ முறைமையாகும்" இக்கூற்றினை ஆராய்க. ( 8 புள்ளிகள் )

இ) கட்டவிழ்ப்பு வாதத்தின் முக்கிய பண்புகளை விமர்சன ரீதியாக பரிசீலனை செய்க ( 8 புள்ளிகள் )

## பகுதி II

05. சைசூரின் ( Saussure ) பிரதான இரட்டை எண்ணக்கருக்களை எடுத்துக்கூறி அவற்றை விரிவாக விளக்குக. (25 புள்ளிகள்)

06. பின்நவீனத்துவம் என்பது நவீனத்துவத்தின் தொடர்ச்சியாகும்" இக்கூற்றினை விமர்சன ரீதியாக ஆராய்க. (25 புள்ளிகள்)